**O.S No. 20/2017**

**Dated.19.07.2025**

**வா.சா.1 கனகாம்பாள்**

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரம் கோரி வழககு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது. மேற்படி எனது தாத்தாவான கருப்பனா தேவருக்கு 3 வாரிசுகள் ஆவார்கள். அவர்களது பெயர்கள் வெள்ளையம்மாள், தலக்கம்மாள், சன்னாசி ஆகியோர்கள். மேற்படி சன்னாசி மேற்படி எனது தாத்தாவின் மகன் என்றால் சரிதான். மேற்படி சன்னாசியின் மனைவி பெயர்கள் 1 வது மனைவி பெயர் பெத்தம்மாள், 2 வது மனைவி பெயர் லட்சுமியம்மாள் ஆகும். மேற்படி தலக்கம்மாள், வெள்ளையம்மாளுக்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் ஆனது என்றால் அதுகுறித்து தெரியாது. மேற்படி பெத்தம்மாளுக்கு 3 வாரிசுகள், அவர்கள் குருவம்மாள், சின்ன சன்னாசி, பெரியசன்னாசி ஆகும். மேற்படி நபர்கள் தாவா சொத்தில் வீடு கட்டி தனித்தனியாக குடியிருந்து வருகீன்றனர் என்றால் 3 வீடுகள் தனியாக உள்ளது. பொதுவான அனுபவத்தில் உள்ளது. மேற்படி 3 வீடுகளில் சின்னசன்னாசி மனைவி முனியம்மாள் ஒரு வீட்டிலும், மற்றொரு வீட்டில் பெரிய சன்னாசி குடும்பமும் மற்றொரு வீடு காலியாகவும் உள்ளது. பூர்வீக சொத்திற்கான கருப்பன தேவர் பெயரில் எந்த ஆவணமும் தாக்கல்செய்யவில்லை. மேற்படி கருப்பண தேவரின் வாரிசுகள் குறித்து வாரிசு சான்றிதழ் தாக்கல்செய்யவில்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**